2008 ஏப்ரல் 16]

105—

மாணவர் விடுதி

***33401—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிக அளவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அங்கு மட்டுமல்ல, இன்னும் பல பகுதிகள்—அமைச்சரிடம் நேரடியாக நான் சொல்லியிருக்கின்றேன். இந்த ஆண்டு வெட்டன்விடுதியில் அமைக்க முடியாவிட்டாலும், திருவரங்குளத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துத் தருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடம் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆலங்குடி தொகுதியில்தான் தற்பொழுது 21 விடுதிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலேயே புதுக்கோட்டை

மாவட்டத்தில்தான் இந்த விடுதிகள் அதிகமாக உள்ளன. நிதிநிலைக்கு ஏற்றாற்போல, நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், என்னுடைய ஆலங்குடி தொகுதியில் அதிக அளவில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதேபோல, படிக்கின்றவர்களும் அதிக அளவில் இருக்கின்றார்கள். ஆகவே, அதிக அளவில் பள்ளிகள் உருவானதன் காரணமாக இந்த மாணவர் விடுதிகள் உருவாகியிருக்கின்றன. ஆகவே, மாணவர் விடுதி அதிக அளவில் இருக்கின்ற காரணத்தினால், நான் சொல்லுகின்ற இந்தப் பகுதியில் அறவே மாணவர் விடுதிகள் இல்லை. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சமுதாயத்தில் கீழ்த்தட்டில் இருக்கின்ற அந்த மாணவர்கள்தான் இங்கே படித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, திருவரங்குளத்தில் ஒரு மாணவர் விடுதி அமைத்துத் தர அமைச்சர் மீண்டும் பரிசீலிப்பாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்த ஆண்டோ, வருகிற ஆண்டோ நிதிநிலைக்கு ஏற்றாற்போல நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் சோலைக்கொட்டாய், பாளையம்புதூர் போன்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

2008 ஏப்ரல் 16]

அவர்களுடைய நலன் கருதி, அங்கே அவர்கள் தங்கிப் படிப்பதற்காக இந்த ஆண்டு விடுதி அமைத்துக் கொடுக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவுடன் வருங்காலத்தில் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் சட்டமன்றத் தொகுதி, அரிமளம் ஒன்றியம் கீழாநிலைக்கோட்டை, ஒத்தைப்புளி குடியிருப்பு ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் விடுதிகள் அமைத்துத் தர வேண்டி கடந்த 2007 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கின்றேன். இந்த ஆண்டு அமைத்துத் தருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இதேபோல அவரவருடைய தொகுதிக்குக் கேட்டிருக்கிறார்கள். எந்தப் பகுதிக்கு இந்த ஆண்டு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசினுடைய ஆய்விலே வைத்து, தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.